நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 68 of 2020

## P.W. 3 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி )**

............

| | | |
|---|---|---|
| பெயர் | : | செந்தில்குமார் |
| தந்தை / கணவர் பெயர் | : | மணி |
| கிராமம் | : | நாட்டாமங்கலம், மாதையன்குட்டை |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW** |
| வயது | : | 51 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், மே மாதம், 28–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் அவரது வழக்கறிஞர் ஆஜர் இல்லை.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 02.15 p.m.,)

1. நான் தற்போது தமிழ்நாடு மின்சார வாரியத்தில் மேச்சேரி உதவி மின் பொறியாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கு சம்பவம் சமயத்தில் கொளத்தூர் புறநகர் பிரிவு மின்சார வாரிய உதவி மின் பொறியாளராக பணியில் இருந்தேன். கடந்த 14.12.2019 ம் தேதி காலை 10.00 மணியளவில் பெரியதண்டா

பகுதியில் யானை இறந்து கிடப்பதாக வனத்துறையிலிருந்து எனக்கு தகவல் கொடுத்தார்கள். தகவல் அறிந்து நான் சம்பவம் இடத்திற்கு அரைமணி நேரத்தில் சென்றுவிட்டேன். நான் போய் பார்க்கும் போது ஒரு ஆண் யானை இறந்து கிடந்தது.

2. நான் அங்கு பார்த்த போது மின்வெளி அமைக்க பயன்படுத்திய ரீப்பர் கட்டை மற்றும் கம்பிகளை வனத்துறையினர் கைப்பற்றி வைத்திருந்தார்கள் அதை பார்த்தேன். அந்த சமயத்தில் 2 நாட்களுக்கு மின்சாரம் வினியோகத்தில் எதேனும் தடை இருந்ததாக வனத்துறையினர் கடிதத்தின் மூலம் என்னிடம் கேட்டனர். நான் அவர்களின் வேண்டுகோள் இணங்க கடிதம் கொடுத்தேன். (மேற்படி 2 நாட்களுக்கு தடையில்லாத மின்சாரம் சாட்சி கொடுத்தாக சொல்லப்படும் கடிதம் இந்த வழக்கில் புகார்தாரால் தாக்கல் செய்யப்படாததால் குறியீடு செய்யப்படவில்லை).

3. மேலும் சம்பவம் இடத்தில் நான் ஆய்வு மேற்கொண்டபோது சம்பவம் நடைப்பெற்ற தோட்டத்தில் இருந்த மின்சார இணைப்பின் எண். 105–006–243 என்று இருந்தது. மின்சார இணைப்பிலிருந்து மின்சார எடுத்தற்கான தடயங்களை எதும் நான் பார்க்கவில்லை. மேற்படி யானை இறந்து கிடந்தது பற்றியும் மின்சார இணைப்பு இருந்தது பற்றியும் ஒரு சான்று வழங்கினேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் சான்று அது தான். **(14.12.2019 ம் தேதியிட்ட அந்த சான்று அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**எதிரி தரப்பில் தற்போது குறுக்கு விசாரணை இல்லை.**
**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**
விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–02.35 p.m.,

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோகுலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**